புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# அழிவின் விளிம்பில் விருந்தோம்பல் பண்பாடு

முனைவர் த. மலையரசி
உதவிப்பேராசிரியர்,
அகர்சந்த்மான்மல்ஜெயின்கல்லூரி,
மீனம்பாக்கம், சென்னை – 600061.

ஆய்வுச் சாரம்:

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் அழிவின் விளிம்பில் உள்ள விருந்தோம்பல் பண்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது. இவ்வாய்வு விளக்கமுறை அணுகுமுறையிலும் , பகுப்பாய்வு முறையிலும், ஒப்பீட்டு முறையிலும் அமைகிறது. இவ்வாய்வில் விருந்தோம்பல் சொற்பொருள் விளக்கம், தமிழர்கள் விருந்தோம்பலுக்கு முக்கிய இடம் அளித்ததின் காரணம், விருந்தை அளிப்போர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள், விருந்தை ஏற்போர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள், இன்றைய காலகட்டத்தில் விருந்தோம்பும் பண்பை மேற்கொள்வதில் ஏற்படும் இடர்பாடுகள் அவற்றை நீக்கும் முறைகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## முன்னுரை

பசி என்ற ஒற்றைச் சொல்லிலேயே நிலைகுழைந்து நிற்கின்றது இன்றைய அறிவியல் உலகம். அப்பசி என்னும் அரக்கனை ஒழிக்கத்தமிழர்கள் ஏந்திய பேராயுதமே விருந்தோம்பல். தமிழரின் தலையாயப் பண்பாட்டுக் கூறுகளுள் விருந்தோம்பல் முக்கியமான ஒன்றாகும். தமிழர்கள் தங்களின் வாழ்வியலை அறம் என்ற உயரிய கோட்பாட்டின் கீழ் வகுத்துக் கொண்டவர்கள்.

“அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின்
மறவாது இது கேள்
மன்னுயிர் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்”[1]

தமிழர்கள் தன் வீடு, தன் பிள்ளை என்று தன்நலத்தோடு வாழாமல் சமூகத்தோடு ஒன்றுபட்டு வாழ்ந்துள்ளனர்.

“பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை”[2]

என்கின்றது கலித்தொகை.

## விருந்தோம்பல் சொற்பொருள் விளக்கம்

'விருந்து' என்னும் சொல்லுக்குப் 'புதுமை' என்ற பொருண்மையைத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். விருந்தோம்பல் என்பது இல்லம் தேடி வரும் புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழி கூறி உபசரித்து உணவளிக்கும் உயரிய பண்பாகும். சக மனிதர்களுக்கு உணவிடும் நேய உணர்வானது விருந்தோம்பல் என்னும் நிகழ்வால் செழுமை பெற்றுள்ளது என்றால் அது சாலப் பொருந்தும்.

## தமிழர்கள் விருந்தோம்பலுக்குக் கொடுத்த முதன்மையான இடம்

தமிழர்கள் விருந்தோம்பலுக்கு மிக இன்றியமையாத இடத்தை அளித்துள்ளனர். ஐந்து நில மக்களும் எந்தவித வேறுபாடுமின்றி விருந்தோம்பலில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதனை வள்ளுவர் தனது குறளில்,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"[3]

விருந்தோம்பலின் இன்றியமையாத தன்மையை உணர்ந்து தமிழர்கள் சிறுவயது முதலே விருந்தோம்பும் பண்பினை சிறுவர்களிடம் வளர்த்து வந்துள்ளனர்.

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"[4]

என்ற சிலப்பதிகார வரிகளில் கண்ணகி கோவலன் இல்லாது விருந்தோம்பாது நாட்கள் கழிந்ததை எண்ணி வருந்தும் காட்சியிலிருந்து தமிழர்கள் விருந்தோம்பலுக்குக் கொடுத்த முதன்மையான இடத்தை உணர முடியும்.

'இராமனைப் பிரிந்த சீதை, இராமன் மனைவியைப் பிரிந்து விருந்தோம்பும் தகுதியை இழந்து துன்புறும் நிலையைக் கண்டு வருந்துகிறாள்.'[5]

முந்தையநாள் வயலில் விதைத்திருந்த முளைவிட்ட நெல்லை அரித்து வந்து அடியாருக்கு உணவு சமைத்து விருந்துபடைத்த நிகழ்ச்சியைப் பெரியபுராணத்தின் இளையான்குடி மாற நாயனார் புராணம் பாடல் 17,18உரைக்கின்றது.

இதிலிருந்து தமிழர்கள் விருந்தோம்பலுக்குக் கொடுத்த முதன்மையான இடம் பற்றி அறிந்து கொள்ளலாம்.

தமிழர்கள் விருந்தோம்பலுக்கு முக்கிய இடம் அளித்த காரணம்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பினால் தான் இவ்வுலகம் நிலைபெற முடியும் என்பதை உணர்ந்த தமிழர்கள் விருந்தோம்பலைப் போற்றினர்.

பழங்காலத்தில் இன்று போல் உணவு விடுதிகள் இல்லை. வாணிபத்தின் பொருட்டுப் பிற காரணத்திற்காகவும் மக்கள் பல நாட்கள் பயணம் மேற்கொள்ள வேண்டிய சூழல். அவர்கள் அவ்வாறு செல்லும்போது தங்களுக்குத் தேவையான உணவை எடுத்துச் செல்லுதல் என்பது பெரும்பாலும் இயலாத காரியமாகும். எனவே சமூகத்தின் இத்தேவையைச் சமன் செய்யும் பொருட்டு விருந்தோம்பும் பண்பானது மக்களிடையே ஓங்கி வளர்ந்திருந்தது. மேலும் தமிழர்கள் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் முக்கியத்துவம் தந்துள்ளனர். பாணர், பொருநர், கூத்தர், விறலியர் போன்ற கலைஞர்களைப் போற்றிப் பாதுகாத்தனர். கலைஞர்கள் தமது திறமையை வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று வெளிப்படுத்தி வந்துள்ளனர். அவ்வாறு அவர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் விருந்தோம்பும் பண்பின் மூலம் அவர்களின் உணவுத் தேவையைத் தமிழர்கள் பூர்த்திச் செய்துள்ளனர். இதனைக் குறுந்தொகை கூறுகிறது.

இதைப் போன்ற பல்வேறு காரணங்களுக்காக விருந்தோம்பல் என்பது உயரிய அறமாகத் தமிழர்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. மேலும் 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்றார் பாரதி, உயர்திணை மட்டுமல்லாது பிற உயிர்களும் பசியால் துன்பப் படக்கூடாது என்று எண்ணிய சமூகம் நம் தமிழ் சமூகம்

'வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளலார்.

இன்றளவும் வாசலில் அரிசி மாவினால் கோலம் இடுவதன் மூலம் சிற்றுயிர்களுக்கும் உணவளிக்கும் விதத்தினைக் காணமுடியும். பசியால் எவ்வுயிரும் துன்பப் படக்கூடாது என்ற எண்ணமே தமிழர்கள் விருந்தோம்பி யதற்கான முக்கியக் காரணம்.

விருந்தை அளிப்போர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்

"கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதல் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"[6]

என்கிறது தொல்காப்பியம். இல்லறத்தில் இருப்பவர்களே விருந்தோம்பும் தகுதி உடையவர்கள். தலைவனை இழந்த தலைவியோ தலைவியை இழந்த தலைவனோ விருந்து ஓம்புவதற்குத்

தகுதியானவர்கள் இல்லை என்கின்றது தமிழ்ச்சமூகம். இதற்குக் காரணம் விருந்தோம்பல் என்பது உறவினரை உபசரிப்பது அன்று முன்பின் அறியாதவரை உபசரிப்பது. முன்பின் அறியாதவர்களில் நல்லோரும் இருப்பர் தீயோரும் இருப்பார். எனவே பாதுகாப்பு கருதி கணவன் மனைவி இருவரும் சேர்ந்தே விருந்தோம்பல் மேற்கொள்ள வேண்டும் என்ற விதியை தமிழ்ச் சமூகம் விதித்து இருக்கலாம்.

“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து”.[7]

என்கிறது குறள். அனிச்ச மலர் போன்ற விருந்தினர்களை அன்போடு நோக்கவேண்டும். விருந்தினரைப் பார்க்கும் பார்வை முரண்பட்டால் அவர்கள் அனிச்ச மலரை போல் வாடி விடுவர். எனவே அவர்களை இன்முகத்தோடு வரவேற்க வேண்டும் . நல்லிரவாக இருப்பினும் விருந்தினர் வந்தால் முகம் திரியாது வரவேற்று உணவளித்த மகளிரையே 'முல்லை சான்ற கற்பினள்'[8] என்கின்றது நற்றிணை

நம்மை நாடி வரும் விருந்தினரை மென்மையான சொல்லால் பேசியும் உள்ளம் கலந்து உறவாடியும் தங்குவதற்கு வசதியான இடம் அளித்தும் ஆடை, அணிகலன்கள் முதலியவற்றையும் அளித்துப் போற்ற வேண்டும். இவ்வாறு விருந்தோம்பினால் விருந்தோம்புபவரைத் தேவர்கள் தம் விருந்தினராக ஏற்றுக் கொள்வார்கள்[9] என்கிறது ஏலாதி .

விவேக சிந்தாமணி விருந்தோம்பும்போது மேற்கொள்ள வேண்டிய விதிகளாகச் சிலவற்றைக் குறிப்பிடுகின்றது. விருந்தினரை மகிழ்வுடன் பார்க்க வேண்டும், இனிமையான சொற்களை அவர்களிடம் பேச வேண்டும், முகமலர்ச்சி கொண்டு நோக்க வேண்டும், வருக என அன்புடன் அழைக்க வேண்டும், மரியாதை நிமித்தமாக எழுந்து நிற்க வேண்டும். விருந்தினர் மகிழும்படியான செய்தியைக் கூற வேண்டும். விருந்தினரின் அருகில் அமரவேண்டும். பிரியும்போது பாசமுடன் பிரிய மனமின்றிப் பிரிய வேண்டும். அவர்கள் பின் செல்ல வேண்டும். விருந்தினரை மகிழ்வான முகத்துடன் வழியனுப்பி வைக்க வேண்டும்[10] என்கின்றது

இது மட்டுமின்றி விருந்தினர் செல்லும்போது ஏழு அடி நடந்து அவர்கள் பின் செல்லவேண்டும். அந்த மரபையே பின்பற்றிக் கரிகாலன் தன்னை நாடி வந்த பொருநர்களை வரவேற்று உபசரித்துப் பின் அவர்கள் விடைபெறும்போது ஏழு அடிதூரம் பின்சென்று வழி அனுப்பினான் [11] என்கின்றது பொருநராற்றுப்படை.

எத்தகைய உணவை விருந்தின்போது அளித்தாலும் அன்போடு அளிக்கவேண்டும். அன்போடு இடப்படாத உணவு நிறைவை உண்டாக்குவதில்லை என்பன விருந்தோம்பலின் அடிப்படையான பண்புகளாகும்.

திருவிழா நடைபெறும் நாட்களில் பெரிய பானைகளில் உணவு சமைத்துச் சுற்றத்தாருக்கும், புதிதாக விழா பார்க்க வரும் விருந்தினருக்கும் அளிப்பதற்கு, தலைவன் தலைவி காத்திருக்கின்றனர். இவ்வாறு ‘அடையா வாயிலோடு’[12] காத்திருந்து விருந்தோம்பிய விதத்தினைக் குறிஞ்சிப்பாட்டு விளக்குகின்றது.

விருந்திற்கு “வருவீர் உளரோ”? என்று இரவு நேரங்களில் அறிவிப்புச் செய்து உணவு வழங்கியுள்ளனர் நம் முன்னோர்.[13] இதனைக் குறுந்தொகை பாடல் வழி அறியலாம்.

இதிலிருந்து வரும் விருந்து ஓம்பி எதிர் விருந்து காத்திருக்கும் நம் தமிழ்ச் சமூகத்தில் விருந்தோம்பும் நெறி முறைகள் பற்றி அறியலாம்.

விருந்தை ஏற்போர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்

விருந்தினர் மகிழும்படி இன்சொல் கூறி இன்முகம் காட்டி இனிய பொருட்கள் கொடுத்துப் போற்றிப் பேணுவது நம் மரபாக இருந்தாலும் இவ்விருந்தைச் சிறப்பிக்கச் செல்லும் விருந்தை ஏற்போர் பின்பற்றவேண்டிய நெறிமுறைகளையும் நம் முன்னோர் வகுத்துக் கூறியுள்ளனர்.

'உண்ட வீட்டிற்கு ரெண்டகம் செய்யக்கூடாது' ,
‘உப்பிட்டவரை உள்ளளவும் நினை’[14]

போன்ற முதுமொழிகள் விருந்தோம்பல் செய்தவருக்கு எந்தவித பாதகத்தையும் விருந்தை ஏற்போர் இழைத்து விடக்கூடாது என்று கற்பித்து உள்ளது.

“என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு”[15]

*என்ற குறளும் இக் கருத்திற்கு வலு சேர்க்கின்றது*

*“முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்*
*`நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்”*[16]

*இதனை 'நீயிர் உண்பீராக ' என்று நஞ்சு கலந்த உணவைக் கொடுத்தாலும் அதனை அறிந்தும் மறுக்காது இன்முகத்துடன் உண்டு பின்பு அவரோடு மேவுவார் என்கின்றது நற்றிணை. இதனையே திருக்குறளும் பெருங்கதையும் (திருக்குறள்- 580), (பெருங்கதை-355) வழி மொழிகின்றது.*

*விருந்திற்குச் செல்லும்பொழுது விருந்தோம்புபவர் வழங்கும் பொருளை ஏற்றுக் கொள்ளாது நன்றி சொல்லி இன்முகத்துடன் விடைபெற வேண்டும் அதுவே உயர்ந்த செயல் என்கின்றது தமிழ் மரபு*

*“கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்*
*கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று”* [17]

*என்கிறது நற்றிணை. விருந்தோம்பும் போது ஒருவருக்கு இதனைக் கொள்வாயாக என்று சொல்லி கொடுத்தல் உயர்ந்த செயலாகும். அவ்வாறு அவனுக்குக் கொடுக்கப்பட்ட பொருளை கொள்ளேன் என்று சொல்லி மறுத்தல் இன்னும் உயர்ந்த செயலாகும் என்று விருந்தை ஏற்போரின் செயல்பாடு எப்படி இருக்க வேண்டும் என்று கற்பிக்கின்றது நற்றிணை.*

*'விருந்தும் மருந்தும் மூன்று நாட்களுக்கு' என்கின்றது தமிழ் மரபு ஒருவர் வீட்டிற்கு விருந்துக்குச் சென்றால் மூன்று நாட்களுக்கு மேல் இருந்தால் அவர்களது இயல்பு வாழ்க்கை பாதிப்படையும் என்பதை உணர்ந்த முன்னோர்கள் இப்படிப்பட்ட இயல்பைக் கற்பித்து எளியோர் வாழ்வில் விருந்தோம்பல் சுமையாக மாறாதவாறு பார்த்துக் கொண்டுள்ளனர்.*

*இத்தகைய நெறிமுறைகளை விருந்தை ஏற்போர் பின்பற்றினால் இன்றைய சூழலிலும் இல்லறத்தில் விருந்தோம்பும் பலரும் மகிழ்ச்சியாக விருந்தோம்புவர்.*

*விருந்தோம்பும் முறையில் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்கள்*

*பண்டைக் காலம் தொட்டு இன்றைய காலம் வரை விருந்தோம்பல் என்பது தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பண்புகளில் தலையாயது. காலந்தோறும் பல்வேறு வாழ்வியல் மாற்றங்களுக்குத் தமிழர்கள் ஆட்ப்பட்ட போதிலும் விருந்தோம்புதல் என்னும் உயரிய பண்பை இன்றளவும் போற்றி வருகின்றனர் என்பது பெருமை மிகுந்த செய்தியாகும். காலம்காலமாகப் பல்வேறு அரசியல் மாற்றங்கள், சமயத் தாக்கங்கள், இனக் கலப்பு, மொழிக் கலப்பு, பண்பாட்டுக் கலப்பு ஏற்ப்பட்டிருந்தாலும் தமிழ்ப் பண்பாட்டின் முக்கியக் கூறான விருந்தோம்பல் இன்றளவும் கூட உயிர்ப்போடு காணப்படுவதை அறியமுடிகின்றது. இல்லற வாழ்வை மேற்கொள்வோர் மட்டுமே விருந்தோம்பல் மேற்கொள்ளலாம் என்று இருந்த நிலையைக் காலப்போக்கில் மாற்றம் கொண்டு சீவகசிந்தாமணியில் விசையைச் சீவகனுக்கு நந்தட்டனுக்கும் விருந்து அளித்ததைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. கணவனை இழந்த விசையை விருந்தோம்பியது*[18]

*விருந்தோம்பல் மரபின் பரிணாம வளர்ச்சி யாகும். கனக மாலை சீவகனுக்கும் நந்தட்டனுக்கும் மற்றும் அவர்களது நண்பர்களுக்கும் விருந்தோம்பிய செய்தி காணக் கிடைக்கின்றது*[19]

*இதன் மூலம் திருமணமாகாத பெண்ணான கனகமாலை விருந்தோம்பியது மற்றும் ஒரு வளர்ச்சிப் படிநிலை ஆகும் (அல்லது) சமணம் தமிழர் மரபில் ஏற்படுத்திய தாக்கமாகலாம்.*

*அறம் தழைத்தால் மட்டுமே மண்ணுயிர்கள் எல்லாம் ஒழுக்க நெறியில் வாழமுடியும். அறம் தழைக்க உணவு இன்றியமையாதது என்பதை உணர்ந்த தமிழக அரசு தமிழக மக்களுக்குக் குறைந்த விலையில் உணவு, சிறார்களுக்குப் பள்ளியில் ஊட்டச்சத்து மிக்க உணவு, குழந்தைகளுக்கு அங்கன்வாடியில் பால் மற்றும் சத்து மாவுகள், கோயில்களில் அன்னதானங்கள் என்று பல வழிமுறைகளில் மனிதர்களின் உணவுத் தேவையை நிறைவு செய்கிறது. மேலும் பல தனியார் தொண்டு நிறுவனங்கள் ஆதரவற்றவர்களுக்கு உணவு வழங்கிப் பேணிக்காப்பதை காணலாம். பலர் தெரு ஓரம் இருக்கும் ஆதரவு இல்லாதவர்களுக்கு உணவு வழங்குவதைக் காணமுடிகின்றது. இதிலிருந்து விருந்தோம்பல் பல வேறுபட்ட பரிணாமங்களை அடைந்த போதும் விருந்தோம்பல் என்னும் உயரிய பண்பு தொடர்ந்து தமிழ் சமூகத்தால்*

கடைபிடிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. வடலூர் வள்ளலார் மடத்தில் அணையா அடுப்பு, முகம் சுழியா உபசரிப்பு, இன்றும் நடைமுறையில் உள்ளது.
நம்மில் மரபு மாறாது இன்றளவும் வாழும் தமிழரும் உள்ளனர் என்பது இங்கு நோக்கத்தக்கது.

இன்றைய காலகட்டத்தில் விருந்தோம்பும் பண்பை மேற்கொள்வதில் ஏற்படும் இடர்பாடுகள் அவற்றை நீக்கும் முறைகளும்

இன்றைய காலகட்டத்தில் விருந்தோம்பும் பண்பு என்பது இல்லங்களில் அருகி வருகின்றது. இதற்குக் காரணம் புதியவர் யாரையும் நம்பும் படியான காலச் சூழல் இல்லை. பாதுகாப்பற்ற சமுதாயமாக இச்சமுதாயம் மாறி இருப்பதே காரணம். சிறுவயது முதலே அறிமுகம் இல்லாதவர்களிடம் பேச்சுக் கொடுக்கக் கூடாது என்று கற்பிக்கின்றனர். அதனால் வளரும் காலங்களில் விருந்தோம்பலும் அச்சம் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இக்காலத்தில் வீட்டுத் திண்ணைகள் சுற்றுத் திண்ணைகள் இல்லாமல் போனதற்கும் சுற்றுச்சுவர் வந்ததற்கும் இதுவே காரணமாகும். குடும்பத்தில் இருவரும் வேலைக்குச் செல்லும் சூழலில் விருந்தினரைப் போற்றுவதும் நெறி முறைப்படி விருந்து கொடுப்பதும் இயலாததாகும். விருந்தோம்பும் போது ஏற்படும் சிறுசிறு தவறுகளைப் பெரிது படுத்துவதின் காரணமாகவும், விருந்தை ஏற்போர் கொள்ளவேண்டிய பண்பை மறந்து செயல்படுவதின் காரணமாகவும் இன்றைய இல்லங்களில் விருந்தோம்பும் பண்பு தொய்வடைகிறது.

"மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனா விருப்பின் தானின்று ஊட்டி"[20]

என்கிறது பெரும்பாணாற்றுப்படை. அதாவது பல வகையான உணவினை விண்மீன்கள் போல் கிண்ணத்தில் பரப்பி விருந்தினரை அன்போடு நோக்கி அவர்கள் விரும்பியதை குறிப்பறிந்து அவர்கள் அருகில் அமர்ந்து விருந்தோம்ப வேண்டும் என்கின்றது. பல வகையான உணவை விண்மீன் போல் தட்டில் பரப்பாவிடினும் விருந்தோம்புபவர் அவர்களால் முடிந்ததை அளிக்கும் போது விருந்தை ஏற்போர் மனமகிழ்ச்சியுடன் குறை கூறாது ஏற்கும் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதனைச் சிறு வயது முதலே கற்பிக்க வேண்டும்.

முடிவுரை

விருந்தோம்பும் இடமும் சூழலும் மாற்றமுற்ற போதிலும் விருந்தோம்பும் தமிழரின் பண்பு சற்று தொய்வடைந்த தன்மையுடன் உள்ளது. அனைவரும் உணவு உண்டு பசியாற வேண்டும் என்ற மேம்பட்ட மனிதநேயச் சிந்தனையோடு இன்றளவும் மனிதர்களிடம் விருந்தோம்பல் வேரூன்றி நிற்கின்றது. விருந்தோம்பல் என்னும் சிறந்த அறம் , ஆரியர் தென்னாடு வந்து, பிறப்பொடு தொடர்புற்ற குலப் பிரிவினையைப் புகுத்தியதால் தமிழரின் ஒற்றுமை சிதைந்தது விருந்தோம்பல் குன்றத் தொடங்கியது என்றால் அது மிகை இல்லை. தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள' சிற்றில் அமைத்தல்'', 'சிறுசோறு சமைத்தல்' போன்ற கூறுகளின் வழியாகத் தமிழர்கள் இளம் உள்ளங்களில் விருந்தோம்பல் பண்பை வளர்த்த நெறி உளங்கொள்ளத்தக்கது. வேளாண் தொழில் வீழ்ச்சி அடையத் தொடங்கியவுடன் விருந்தோம்பலும் சிதையத் தொடங்கியது. வேளாண்மைத் தொழில் வீழ்ச்சியைச் சந்தித்ததால், ஆற்றோர நாகரீகம் நசிந்து, குவிதல் முறைப் பொருளாதாரம் தொடங்கியவுடன் சாலையோர நாகரீகமும் , இனக்கலப்புச் சூழலும் ஏற்பட்டன. கூட்டுக் குடும்பம் சிதரித் தனிக்குடித்தனமும் ,தனிமைத் தனமும் தோன்றத் தமிழரின் இல்லற வாழ்வைச் சிதைத்தன. ஊரகப் பகுதியில் விருந்தோம்பல் பல்கியும் நகரங்களில் விடுதிகளும் , உணவகங்களும் பெருகியும் காணப்படுகிறது.

அக்காலங்களில் மன்னரோடு மக்களும் விருந்தோம்பும் அறத்தைப் பேணிக் காத்துள்ளனர். தமிழர்கள் விருந்தோம்பும் பண்பு நிலைத்திருக்க விருந்தோம்புபவர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை வகுத்து கூறியுள்ளனர். விருந்தை ஏற்போருக்கான நெறிமுறைகளையும் வகுத்து கூறியுள்ளனர். அவற்றை மக்கள் முறையாகக் கடைப்பிடித்தால் விருந்தோம்பல் என்பது காலம் தோறும் அழியாப் பண்பாக மக்களிடம் வாழும். தமிழ்ச் சமூகம் எக்காலத்திலும் அறத்தின் நின்று வழுவா நிலை பெற்று இருக்கும். இன்றைய காலகட்டத்தில் இல்லறத்தில் விருந்தோம்பும் பண்பு மேற்கொள்வதில் பல்வேறு இடர்பாடுகள் இருந்த போதிலும் அவற்றைக் களைந்து

விருந்தோம்பும் பண்பை நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் . இது தமிழர்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

*அடிக்குறிப்பு*

*1.மணி.,25.288-291*
*2.கலித்தொகை,133*
*3.குறள்-81*
*4.சிலம்பு- மதுரைக் காண்டம், கொலைக்களக்காதை- 73 – 75*
*5.கம்ப. சுந்தரகாண்டம்.கா.ப,15;2*
*6. தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல்- 11*
*7.குறள் 90*
*8.நற்றிணை,142:9-11*
*9. ஏலாதி-7*
*10.விவேக சிந்தாமணி- 55*
*11.பொருநன் – 166*
*12.குறிஞ்சி-201-205*
*13. குறுந்தொகை-118*
*14. முதுமொழி*
*15. குறள் -110*
*16. நற்றிணை -355*
*17.நற்றிணை-204*
*18. சீவக சிந்தாமணி 1917:4*
*19. சீவக சிந்தாமணி -1731:2-3*
*20. பெரும்பாணாற்றுப்படை 477-47*

*துணை நூல் பட்டியல்*

*1.அறவாணன், க.ப.(தொகு.ஆ.),அற இலக்கியக் களஞ்சியம், தமிழ்க்கோட்டம் , சென்னை, 2008.*
*2. இராசாராம், துரை (உறை.ஆ.), பதினெண் கீழ்க்கணக்கு (தொகுதி I,II,III), முல்லை நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2007.*
*3. இளம்பூரணர், உரையாசிரியர், தொல்காப்பியம், எழுத்ததிகாரம், கழகம், சென்னை, 1974.*
*4. கம்பராமாயணம், சுந்தரகாண்டம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1965.*
*5. குருசாமி, ம.ரா.போ., பாரதி பாடல்கள், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், திருத்திய மூன்றாம் பதிப்பு, 2001.*
*6.சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை, ந.மு. வேங்கடசாமி நாட்டார்& அவ்வை. சு. துரைசாமிப் பிள்ளை, உரையாசிரியர், கழகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1951.*
*7. சீவக சிந்தாமணி, தமிழ் ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், 1986.*
*8. சோமசுந்தரனார், பொ.வே.உரையாசிரியர், கலித்தொகை, கழகம், சென்னை, 1975.*
*9.சோமசுந்தரனார், பொ.வே.உரையாசிரியர், குறுந்தொகை, கழகம், சென்னை, 1972.*
*10. தமிழண்ணல், தொல்காப்பியம் (தொகுதி I,II,III), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2006.*
*11.திருத்தக்க தேவர், சீவக சிந்தாமணி, நச்சினார்கி னியர், உரையாசிரியர் ,உ.வே.சா.பதிப்பு, சென்னை, ஏழாம் பதிப்பு, 1969.*
*12. தொல்காப்பியம், நியூ செஞ்சுரி, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1981.*
*13. நாராயணசாமி ஐயர், அ.( உரை.ஆ.), நற்றிணை நானூறு, கழகம், சென்னை, 1976.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********